### ‘சீர்மிகு ஆளுமை’ திட்டத்தின் கீழ்

# ‘விரைவு துலங்கல் குறியீடு’ மென்பொருள் செயலி : முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

## ‘செழிப்பு’ இயற்கை உரத்தை அறிமுகப்படுத்தினார்!

சென்னை, மே 14-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (12.5.2023) தலைமைச் செயலகத்தில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில், அனைத்து மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகளில் வசிக்கும் மக்களுக்கு வழங்கப்படும் சேவைக்கான “விரைவு துலங்கல் குறியீடு - QR Code” மென்பொருள் செயலியை தொடங்கி வைத்தார். மேலும், ஈரக்கழிவுகளிலிருந்து தயாரிக்கப்படும் இயற்கை உரத்திற்கு “செழிப்பு” என பெயரிட்டு விற்பனைக்காக அறிமுகப்படுத்தினார்.

தமிழ்நாடு அரசு நிர்வாக செயல்பாடுகளில் டிஜிட்டல் மயமாக்குதல் என்பது வளர்ந்து வரும் தகவல் தொழில் நுட்பத்தின் அடிப்படையில் துறை தோறும் அறிமுகப்படுத்தப்பட்டு வருகிறது. இந்நிலையில் அரசு நடவடிக்கையில் நம்பகத்தன்மையை அதிகரிக்கும் விதத்தில் டிஜிட்டல் தகவல் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி மக்களுக்கான சேவைகளை உறுதிப்படுத்திடவும், வெளிப்படைத்தன்மையோடு தகவல் பரிமாற்றம் செய்து அரசின் நிர்வாக செயல்பாடுகளின் விவரங்களையும் சேவைகளையும் மக்கள் அடைந்திடவும் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2022-23ஆம் ஆண்டிற்கான நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மானியக் கோரிக்கையில், நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் பணி மற்றும் சேவைகளை நிகர்நிலையில் கண்காணிக்கவும், பணிகள் குறித்த விபரங்களை மக்கள் தெரிந்து கொள்ளவும், பணி மற்றும் சேவை குறித்த மக்களின் கருத்துக்களை விரைவு துலங்கல் குறியீடு (க்யூஆர் கோடு) போன்ற செயலிகள் மூலம், நிகர்நிலையில் தெரிவித்திடவும் சிறப்பான சீர்மிகு ஆளுமை திட்டம் செயல்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பின்படி, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை தற்போது வலைசெயலி மூலம் நகரில் உள்ள கட்டமைப்புகளை உள்ளடக்கிய வரைபடம் தயாரிக்கப்பட்டு தகவல் தொழில்நுட்ப முறையில் விரைவு துலங்கல் குறியீடு (க்யூஆர் கோடு) ஒவ்வொரு அரசு சார் கட்டமைப்புகள், தனியார் வரிவிதிப்பு கட்டமைப்பிற்கும் உருவாக்கியுள்ளது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்றையதினம் அனைத்து மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகளில் வசிக்கும் மக்களுக்கு வழங்கப்படும் சேவைக்கான “விரைவு துலங்கல் குறியீடு - QR Code” மென்பொருள் செயலியை தொடங்கி வைத்தார்.

இந்த விரைவு துலங்கல் குறியீடு (க்யூஆர் குறியீடு) ஒவ்வொரு கட்டமைப்புகளின் முகப்புகளிலும் பயன்படுத்தத்தக்க வகையில் உள்ளாட்சி ஊழியர்களால் ஒட்டப்படும். இந்த விரைவு துலங்கல் குறியீடு (க்யூஆர் குறியீடு) மூலம் பொதுமக்கள் உள்ளாட்சி சேவைகளின் மீதான நிறைகுறைகளை தெரிவிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளதால் உள்ளாட்சி ஊழியர்கள் தங்களது பணியினை மேம்படுத்தி மக்களுக்கு திருப்திகரமான சேவைகளை செய்திட வழிவகுக்கும்.

மேலும், சொத்து வரி உள்ளிட்ட அனைத்து வரி நிலுவைகளைப் பற்றிய அறிவிப்பை பெற்று செயலி மூலமே தொகையை செலுத்தலாம். பிறப்பு, இறப்பையும், வீட்டிலிருந்தவாறே விரைவு துலங்கல் குறியீடு (க்யூஆர் குறியீடு) ஸ்கேன் செய்து பதிவு செய்யலாம். இவ்வாறு பெறப்படும் புகார் / கோரிக்கைகள் மீது எடுக்கப்படும் நடவடிக்கை குறித்த விவரங்கள், அவற்றின் நிலைப்பற்றியும் உடனுக்குடன் தெரிந்து கொள்ள முடியும்.

அத்துடன், உள்ளாட்சி கட்டமைப்புகளான, பூங்காக்கள், பேருந்து நிலையங்கள், எரியூட்டு மயானம், மார்க்கெட், விளையாட்டு மைதானம், நகர்நல மையம், கழிப்பறைகள் உள்ளிட்ட பொதுமக்கள் பயன்படுத்தும் அனைத்து இடங்களிலும் பொருத்தப்பட்டுள்ள விரைவு துலங்கல் குறியீடு (க்யூஆர் குறியீடு) மூலம் பொதுமக்கள் தங்களது கருத்துக்களை பதிவு செய்தால் உள்ளாட்சிகளில் நடவடிக்கை எடுக்கப்பட்டு அக்கட்டமைப்புகளை மேலும் நல்ல முறையில் மக்கள் எதிர்பார்ப்பிற்கு ஏற்ப மேம்படுத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு பொதுமக்கள் விரைவு துலங்கல் குறியீடு (க்யூஆர் குறியீடு) மூலம் தெரிவிக்கும் கோரிக்கைகள் / புகார்கள் அனைத்தும் உள்ளாட்சி அலுவலகத்தில் உள்ள கட்டுப்பாட்டு அறையில் ஒருங்கிணைந்த முறையில் பெறப்படும். பின்பு அவை தொடர்புடைய அலுவலர்கள் மூலம் தீர்வு காணப்படுவதால் பொதுமக்களுக்கான சேவைகள் அனைத்தும் இந்த “சீர்மிகு ஆளுமை” திட்டத்தின் மூலம் முழுமையாக செயல்படுத்தப்படும்.

**“செழிப்பு” இயற்கை உரம் விற்பனை**

202324ஆம் ஆண்டிற்கான நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மானியக் கோரிக்கையில், நகர்ப்புரங்களில் சேகரிக்கப்படும் மக்கும் குப்பைகள் நுண்ணுரக் கூடங்களில் இயற்கை உரமாக மாற்றப்படுகிறது. தரமான இயற்கை உரத்தை நுகர்வோருக்கு அளிக்கும் பொருட்டு, உரத்தின் தழை, மணி மற்றும் சாம்பல் சத்து பகுப்பாய்வு செய்யப்படுகிறது. இவ்வாறு பகுப்பாய்வு செய்யப்பட்ட இயற்கை உரத்தினை “செழிப்பு” என்ற பெயரில் தரக்குறியீடு நிர்ணயம் செய்து அனைத்து நகரங்களிலும் விற்பனை செய்து வருமானம் ஈட்ட வழிவகை செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அதன்படி, ஈரக்கழிவுகலிருந்து தயாரிக்கப்படும் இயற்கை உரத்திற்கு “செழிப்பு” என பெயரிட்டு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்றையதினம் விற்பனைக்காக அறிமுகப்படுத்தினார்.

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து நகர்ப்புர உள்ளாட்சிகளிலும் சுமார் 15,000 டன் குப்பை நாளொன்றுக்கு சேகரம் ஆகிறது. இதில் சுமார் 55 சதவீதம் மக்கும் குப்பையாகும். மக்கும் குப்பையிலிருந்து சுமார் 15 சதவீதம் உரமாக பெறப்படுகிறது.

மாநகராட்சிகளில் 629 இடங்களில், நகராட்சிகளில் 334 இடங்களில் மற்றும் பேரூராட்சிகளில் 489 இடங்களிலும் உள்ள நுண் உர மையங்கள் மற்றும் காற்றாடல் மையங்களில் மக்கும் குப்பை அறிவியல் முறையில் செயலாக்கம் செய்யப்பட்டு இயற்கை உரமாக மாற்றப்படுகிறது. இவற்றில் நாள் ஒன்றுக்கு சுமார் 870 மெ.டன் இயற்கை உரம் தயாரிக்கப்பட்டு விவசாயிகள் மற்றும் பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்படவுள்ளது.

இந்த உரம் பயன்படுத்தும் பொழுது மண்ணின் காற்றோட்டம் மற்றும் நீரை தேக்கி வைத்துக் கொள்ளும் தன்மை மேம்படுத்தப்படுவதோடு, மண்ணில் இடப்படும் இரசாயன உரத்திலிருந்து சத்துக்களை விடுவிக்கும் தன்மை மற்றும் அதனை பயிர் ஏற்று கொள்ளும் வடிவில் சத்துக்களை மாற்றும் தன்மையும் ஏற்படும்.

இந்த நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் / முதன்மைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் கிர்லோஷ் குமார், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் வி. தட்சிணாமூர்த்தி, பேரூராட்சிகளின் இயக்குநர் கிரண் குராலா, நகராட்சி நிர்வாகத் துறை இயக்குநர் பா. பொன்னையா, ஆவடி மாநகராட்சி ஆணையர் க. தர்பகராஜ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



சென்னையில் நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் தலைமையில், நேற்று முன்தினம் (12.05.2023) புவியியல் மற்றும் சுரங்கத்துறை மாவட்ட அலுவலர்களின் செயல்திறன் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் புவியியல் மற்றும் சுரங்கத்துறை ஆணையர் ஜெ.ஜெயகாந்தன், மற்றும் துறை சார்ந்த உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### திருவண்ணாமலை - செய்யாறு பகுதியில்

# ரூ.1000 கோடி மதிப்பில் ராயல் என்ஃபீல்டு ஆலை!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

திருவண்ணாமலை, மே 14-

திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறு பகுதியில் ரூ. 1,000 கோடி முதலீட்டில் ராயல் என்ஃபீல்டு எலக்ட்ரிக் ஆலை நிறுவப்படும் என தமிழக அரசு தெரிவித்திருக்கிறது. ராயல் என்ஃபீல்டு நிறுவனம் மின்சார இருசக்கர வாகன உற்பத்தியை தொடங்க ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறது. பிரபல மோட்டார் சைக்கிள் ஆனா ராயல் என்ஃபீல்டு நிறுவனம் தனது முதல் எலக்ட்ரிக் இருசக்கர வாகனம் உற்பத்தியை திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறு பகுதியில் அமைக்கவுள்ளது.

60 ஏக்கர் நிலப்பரப்பளவில் ரூ. 1000 கோடி முதலீட்டில் இந்த எலக்ட்ரிக் ராயல் என்ஃபீல்டு வாகனம் முதன்முறையாக தயாராகிறது. இந்த நிதி ஆண்டில் இதற்கான பணியை தொடங்குவோம் என்று அந்த நிறுவனம் திட்டமிட்டுள்ளதாக தமிழக அரசின் தொழில் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். ஏற்கனவே ஓலா நிறுவனத்தின் எலக்ட்ரிக் வாகனம் கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி பகுதியில் பணிகள் நடைபெற்று உற்பத்தி தொடங்கி உள்ள நிலையில், இந்த அடுத்த தலைமுறைகனா எலக்ட்ரிக் வாகனம் மிகவும் அதிக அளவில் தொடங்கியுள்ளது.

திருவண்ணாமலை போன்ற பொருளாதாரத்தில் பின்தங்கி இருக்கக்கூடிய மாவட்டத்தில் ஆரம்பத்தில் மூலம் அங்கு ஏராளமான இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இச்சர் மோட்டார் நிறுவனம் தான் இந்த ராயல் என்ஃபீல்டு என கூறப்படுகிறது. அந்த நிறுவனத்துடைய இந்த மின்சார இருசக்கர வாகனம் என்பது பெரிதும் முக்கிய முதலீடாக பார்க்கப்படுகின்றது.

தொழில் துறை சார்பில் கடந்த சில தினங்களாக ஹ்யுண்டாய் கார் நிறுவனத்தின் உடைய முதலீடு, முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் நேரடியாக தொடங்கி வைத்த இரண்டு திட்டங்கள் இருக்கின்றன, இதன் தொடர்ச்சியாக சிஸ்கோ என்ற அமெரிக்க நிறுவனம் பெரிய அளவிலான முதலீடு செய்வதற்கு திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.



சேலம் மாநகரம் பொன்னமா பேட்டை பகுதி தி.மு.க சார்பில் அம்மாபேட்டை பெரியார் நினைவு தூண் அருகில் கழக அரசின் 2 ஆண்டு சாதனை விளக்கப் பொதுக் கூட்டத்தில் மாவட்டக் கழக செயலாளர் ரா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு பேசினார். மற்றும் தலைமைக் கழக பேச்சாளர் சேலம் சுஜாதா, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் கே.டி.மணி, தாமரைக்கண்ணன், பகுதி செயலாளர்கள் கேபிள். ராஜா, கே.டி.ஆர்.தனசேகரன், பொதுக்குழு உறுப்பினர். லேகநாதன். அவைத்தலைவர் கே.ஆர்.முருகன், செயலாளர் சம்பத். குமாரசாமி ஆகியோர் பேசினார்கள்.

### தமிழ்நாடு அரசுக்கும் அமைச்சர்களுக்கும்

# நன்றி தெரிவிக்கும் மாநாடு!

## கோவில் பூசாரிகள் நலச் சங்கம் அறிவிப்பு!

சிவகங்கை, மே 14-

சிவகங்கை மாவட்ட கோவில் பூசாரிகள் சார்பில் தமிழ்நாடு அரசுக்கும் அமைச்சர்களுக்கும் நன்றி தெரிவிக்கும் மாநாடு இன்று (14.5.2023 - ஞாயிறு) காலை 11 மணியளவில் சிவகங்கை பெமினா திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

தமிழ்நாடு அமைச்சர்கள் கே.ஆர்.பெரியகருப்பன், பி.கே.சேகர்பாபு ஆகியோருக்கு நன்றி தெரிவிக்கும் இம்மாநாடு எம். திருவள்ளுவர் தலைமையில் வைரமணி முன்னிலையில் நடைபெறுகிறது.

எம்.சரவணன், எம்.குமார் முன்னிலை வகிக்கின்றனர்.

பூசாரிகள் நலச் சங்க மாநிலத் தலைவர் பி.வாசு சிறப்புரை நிகழ்த்துகிறார்.

கே.பசும்பொன், எம். பாண்டி, எஸ்.வேலு மற்றும் மாவட்ட. நகர. ஒன்றிய பொறுப்பாளர்கள் பங்கேற்கிறார்கள்.

பூசாரிகளின் கோரிக்கைகளை தொடர்ந்து நிறைவேற்றி வரும் தமிழ்நாடு அரசுக்கு இதில் நன்றி தெரிவித்து தீர்மானம் நிறை வேற்றப்படுகிறது.

இதுவரை ரூ.5 கோடியே 75 இலட்சத்து 90 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது!

2012 ஜூன் மாதம் முதல் உதவித் தொகை ரூ. 10 ஆயிரத்திலிருந்து ரூ.20 ஆயிரமாகவும்

2013 ஆகஸ்ட் மாதத்திலிருந்து ரூ. 25 ஆயிரமாகவும் உயர்த்தி வழங்கப்படுகிறது!

# கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில்

## நலிந்தோர் மற்றும் மருத்துவம் - கல்வி உதவி நிதியாக

# இன்று ரூ.2,00,000/- கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

கலைஞர் கருணாநிதி அறக்கட்டளைக்காக, தலைவர் கலைஞர் அவர்கள் தனது சொந்த பொறுப்பில் அளித்த ஐந்து கோடி ரூபாயினை வங்கியில் வைப்பு நிதியாக போடப்பட்டு, அதில் கிடைக்கப்பெறும் வட்டித் தொகையினைக் கொண்டு, மாதந்தோறும் ஏழை எளிய நலிந்தோர்க்கு உதவித் தொகையாக 2005 நவம்பர் மாதம் முதல் 2007 ஜனவரி மாதம் வரை வழங்கப்பட்டு வருகிறது.

வைப்பு நிதியாக போடப்பட்ட ஐந்து கோடி ரூபாயில், 30வது புத்தகக் கண்காட்சியினை 10.1.2007 அன்று திறந்து வைத்து தலைவர் கலைஞர் பேசுகையில், கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில், தென்னிந்திய புத்தக விற்பனையாளர், பதிப்பாளர் சங்கத்துக்கு ஒரு கோடி ரூபாய் வழங்கப்படும் என அறிவித்து அச்சங்கத்துக்கு வழங்கியது போக மீதமுள்ள நான்கு கோடி ரூபாயிலிருந்து வரும் வட்டித் தொகையில் 2007 பிப்ரவரி முதல் தொடர்ந்து உதவித் தொகை வழங்கப்படுகிறது.

2005 நவம்பர் முதல் இதுவரை வழங்கிய நிதி ரூ. 5 கோடியே 75 லட்சத்து 90 ஆயிரம். இந்த மாதம் நலிந்தோர் மற்றும் மருத்துவம் மற்றும் கல்வி உதவி நிதியாக மொத்தம் 8 பேருக்கு தலா ரூபாய் 25 ஆயிரம் வீதம் மொத்தம் ரூ.2,00,000/– (இரண்டு லட்சம்) 12–5–2023 அன்று கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** வழங்கினார். நிதி பெறுவோர் வெளி மாவட்டங்களிலிருந்து வந்துபோகிற செலவினத்தை தவிர்ப்பதற்காக தபால் மூலம் வரைவுக் காசோலையாக அனுப்பப்படுகிறது.

**நிதி உதவி பெறுவோர் விவரம்**

| | | |
|---|---|---|
| 1. | எஸ். மாரி, அன்னை சிவகாமி நகர், பீச் ரோடு, எண்ணூர், சென்னை – 57 | 25,000/– |
| 2. | து.சாலமோன், 5வது தெரு, ஜீவன்நகர், ஆதம்பாக்கம், சென்னை – 88 | 25,000/– |
| 3. | பி.ஏழுமலை, இருமரம் கிளைச் செயலாளர், உத்திரமேரூர், காஞ்சிபுரம் தெற்கு | 25,000/– |
| 4. | க.தனபால், வெங்களத்தூர் காலனி, வெம்பாக்கம், திருவண்ணாமலை வடக்கு | 25,000/– |
| 5. | ஏ.ஆனந்தன், கிளைச் செயலாளர், நரசிங்கராயன்பேட்டை, விழுப்புரம் வடக்கு | 25,000/– |
| 6. | கே.ரமணி, முரசொலி முகவர், வ.உ.சி.நகர், புலிவலம், திருவாரூர் மாவட்டம் | 25,000/– |
| 7. | ஆர். பாலகிருஷ்ணன்,ஆண்டிப்பட்டி, தா.பேட்டை ஒன்றியம், திருச்சி வடக்கு | 25,000/– |
| 8. | ஆர். மாணிக்கம் கலிங்கமுடையான்பட்டி, துறையூர் தாலுகா, திருச்சி மத்திய | 25,000/– |
| | **மொத்தம்** | **ரூ.2,00,000/-** |

### அறங்காவலர்கள் நியமனம் தொடர்பாக

# தமிழ்நாடு அரசு மேற்கொண்ட நடவடிக்கை!

## உச்சநீதிமன்றம் பாராட்டு!

புதுடெல்லி, மே 14-

இந்து சமய அறநிலையத் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்களுக்கு அறங்காவலர்கள் நியமனம் செய்வது குறித்து இந்து தர்ம பரிஷத் தாக்கல் செய்த வழக்கு நேற்று முன்தினம் (12.05.2023) மாண்பமை உச்சநீதிமன்றத்தில் நீதியரசர்கள் ஏ.எஸ். போபண்ணா மற்றும் சஞ்சய் கரோல் ஆகியோர் முன்னிலையில் விசாரணைக்கு வரப்பெற்றது.

இவ்வழக்கில் தமிழ்நாடு அரசின் சார்பில் அறங்காவலர்கள் நியமனம் செய்திட மாவட்டக் குழு அமைத்து அரசால் பிறப்பிக்கப்பட்ட ஆணைகள் மற்றும் திருக்கோயில்களில் அறங்காவலர்கள் நியமனம் செய்து பிறப்பிக்கப்பட்ட ஆணைகளின் நகல்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டன.

இவ்விசாரணையின் போது அறங்காவலர்களை நியமனம் செய்திட தமிழ்நாடு அரசால் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகளை நீதியரசர்கள் பாராட்டியதுடன் விரைவில் அனைத்து திருக்கோயில்களுக்கும் அறங்காவலர்கள் நியமனம் செய்திட அறிவுறுத்தி, வழக்கினை ஆகஸ்ட் மாதம் கடைசி வாரத்திற்கு ஒத்தி வைத்தனர்.

### புதுக்கோட்டை வடக்கு மாவட்ட

# இளைஞரணி துணை அமைப்பாளரின் சகோதரர் மறைவு!

## அமைச்சர் எஸ்.ரகுபதி - கே.கே.செல்லப்பாண்டியன் நேரில் அஞ்சலி!

புதுக்கோட்டை, மே 14-

வளவம்பட்டி காலம் சென்ற வேளாண்மை விற்பனை துறையில் பணி புரிந்த து.பெரியய்யா தேவர் மகனும்,

ஒய்வு பெற்ற மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் சாமி.சத்தியமூர்த்தி,

தி.மு.க. ஒன்றிய பிரதிநிதி சாமி.ரெங்கராஜ் ஆகியோரது அண்ணன் மகனும்,

தி.மு.க. மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் மு.கலைஞர் கருணாநிதி அவர்களது சகோதரர் பெ.பாலமுருகன் 12.5.2023 வெள்ளிக்கிழமை காலை உடல்நலக்குறைவால் இயற்கை எய்தினார்.

அன்னாரது உடல் மாலை 4 மணிக்கு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு சொந்த ஊரான வளவம்பட்டியில் நல்லடக்கம் மாலை 4.00 மணியளவில் செய்யப்பட்டது.

நிகழ்வில் மாவட்டக் கழக செயலாளர்கள் சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி, வழக்கறிஞர் கே. கே.செல்லபாண்டியன், புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் வை.முத்துராஜா, கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் தோழர் எம். சின்னத்துரை, மாநில தொண்டர் அணி துணைச் செயலாளர் சுப.சரவணன், மாவட்ட அவைத் தலைவர் அரு.வீரமணி, மாவட்ட துணைச் செயலாளர்கள் பெ.ராஜேஸ்வரி, தலைமை செயற்குழு உறுப்பினர் சு.சண்முகம் மற்றும் பலர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.



கோயம்புத்தூர் சாய்பாபா காலனியில் ஹேண்ட் லூம்ஸ் இந்தியா விற்பனையகம் மற்றும் கோ ஆப் டெக்ஸ் பாலமுருகன் புதிய விற்பனை நிலையத்தை கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி திறந்து வைத்து முதல் விற்பனையை துவங்கி வைத்தார்.இதில் மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக், கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் கிராந்தி குமார் பாடி, கோயம்புத்தூர் சட்டமன்ற உறுப்பினர் திருமதி. வானதி சீனிவாசன், கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்துறை அரசு முதன்மைச் செயலாளர் தர்மேந்திர பிரதாப் யாதவ், பி.ஆர்.நடராஜன் எம்.பி., தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.எஸ்.ராஜா, அணைக்கட்டு சட்டமன்ற உறுப்பினர் ஏ.பி. நந்தகுமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர் சிவாஜி, இராணிப்பேட்டை மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் எஸ்.வினோத் எம்.சி, கோயம்பத்தூர் மாநகராட்சி மேயர் திருமதி.கல்பனா ஆனந்தகுமார், மாமன்ற உறுப்பினர் பி.எஸ்.சரவணகுமார் மற்றும் துறை சார்ந்த அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.